வேண்டுமென்றும், இனிமேல் பணம் செலவழிக்கப்படாமல் இருக்கக் கூடாது என்றும் அவருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. 1971-72-ம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 15 லட்சம் ரூபாயும் செல வழிக்கப்பட்டுவிட்டது.

திருமதி த. ந. அனந்தநாயகி : சார், திருச்சி மாவட்டத்தில் அரிஜனங்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்கு, விளை நிலங்க ளாக இருந்தால் அதை கட்டாயமாகக் கையகப்படுத்தக் கூடாது என்று அரசாங்கம் உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : விளை நிலங்களாக இருந்தாலும், அவை தேவையாக இருந்தால், உரிய தொகை யினைக் கொடுத்து கையகப்படுத்தப்படும்.

குடிசை பகுதிச் சிறுவர்களுக்குப் பயிற்சி முகாம்

* 386 **வினா—திரு. பெ. மலைச்சாமி** : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப் பாரா—

(அ) சென்னையில் குடிசைப் பகுதிச் சிறுவர்களைச் சீர்திருத் தும் வகையில் காவல் துறையினர் பயிற்சி முகாம் ஏதேனும் நடத்தினர்களா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : (அ) ஆம்.

(இ) 1971-ம் ஆண்டு மே மாதம் 21, 22 மற்றும் 23 தேதிகளில் ஆவடியிலுள்ள டோனிக் கோலா சரகத்திலும் மற்றும் அதே ஆண்டு ஜூலை மாதம் 9, 10 தேதிகளில் பூண்டி அணைக்கட்டிலும் முகாம்கள் நடத்தப்பட்டன.

கோவை மாவட்டத்தில் அரசு தரிசு நிலங்கள்

* 387 **வினா—திரு. என் மருதாசலம்** : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1969-1971-ல் கோவை மாவட்டத்தில், சர்க்கார் புறம் போக்கு நிலங்கள் மொத்தம் எவ்வளவு ?

1972 மார்ச் 9]

(இ) விவசாயம் செய்ய வழங்கியது எத்தனை ஏக்கர் ?

(உ) வீடு கட்ட அளிக்கப்பட்ட நிலத்தின் அளவு என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் . (அ) 13,31,467 ஏக்கர்.

(இ 20,089 ஏக்கர்.

(உ) 996 ஏக்கர்.

திரு. என். மருதாசலம் : தலைவரவர்களே, சில தனியார்கள் புறம்போக்கு நிலத்தில் பயிர் செய்து வருகிறார்கள். எத்தனை பேர் அப்படி புறம்போக்கு நிலத்தில் பயிர் செய்கிறார்கள் ? அதைப் பறிமுதல் செய்து, நிலமற்ற மக்களுக்கு கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, தனியார் எத்தனைபேர் புறம்போக்கு நிலங்களை உழுது பயிர் செய்து வருகிறார்கள் என்ற புள்ளிவிபரம் இல்லை. தனியார் பயிர் செய்கிறார்கள் என்பதற்காக எல்லா நிலத்தையும் கையகப்படுத்த முடியாது. நிலமில்லாதவர்கள் பயிர் செய்து வந்தால், அவர்களுக்கு குறிப்பிட்ட அளவுக்குக் கொடுத்துப் போக மீதி நிலம் கையகப்படுத்தப்பட்டு, நிலமற்றவர்களுக்குக் கொடுக்கப்படும்.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, அரசாங்கத்தினிடத்தில் நிலத்தைப் பயிர் செய்வதற்கென்று அடமானம் செய்து பெற்றுக்கொள்கிறார்கள். அடமானம் செய்து கொடுத்த பின்னால், அவர்கள் அந்த நிலத்தில் பயிர் செய்கின்றார்களா என்பதை அரசாங்கம் பரிசீலனை செய்து வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, பயிரிடுவதற்காகத்தான் நிலம் கேட்கிறார்கள். பயிர் செய்வார்கள் என்ற நம்பிக்கையில்தான் நிலம் அடமானம் செய்து கொடுக்கப்படுகிறது. அப்படி எங்காவது பயிர் செய்யவில்லை என்ற புகார் வந்தால் அரசு பரிசீலனை செய்யும்.

[1972 மார்ச் 9

திரு. க. மு. இராசகோபால் : தலைவரவர்களே, கொடுக்கக் கூடிய பட்டாக்கள் டெம்பரரியாகக் கொடுக்கப்பட்டு, நீண்ட நாட்களாகியும் பெர்மனன்ட் செய்து கொடுக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, உடனடியாக பெர்மனன்ட் செய்து கொடுக்க, அரசாங்கம் துரித நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : புரொவிஷனல் பட்டாவாக இருந்தால், பரிசீலித்து தக்க நடவடிக்கை எடுக்க துரிதப்படுத்தப் படும்.

திரு. ஆர் பொன்னப்ப நாடார் : தலைவரவர்களே, 996 ஏக்கர் நிலம் வீடு கட்ட அளிக்கப்பட்டதாக அமைச்சரவர்கள் பதில் சொன்னார்கள். அந்த நிலங்கள் எத்தனை பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்ற விபரத்தை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அந்த 996 ஏக்கர் நிலமும் 33,563 பேர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக் கின்றது.

DR. H. V. HANDE : During the discussion is it not a fact that it was said that a particular member Mr. Natesa Mudaliar owns nearly 30 acres of poramboke land and on enquiry, is it not a fact that he holds only 2 acres and 94 cents and that too, that has been regularised by the Government? May I know whether this particular matter has been examined by the Government? If so, may I know the correct position, so that the House will know the correct position and so that no person will be unnecessarily taken to task or no aspertion is casts against any person who is outside this House?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, கனம் சுதந்திராக் கட்சி உறுப்பினர் அவர்கள் பழைய காங்கிரஸ் கட்சி உறுப்பினருக்காக இந்தத் தகவலைச் சேகரித்து வந்து சொல் கிறார்கள் என்று நினைக்கின்றேன். அது உண்மையா இல்லையா என்பதை அரசாங்கம் பரிசீலித்துப் பின்னால் தான் அறிய முடியும். பரிசீலனைக்குப் பின்னால் நிலம் கொடுக்கப்பட்டிருந்தால், அதை கையகப்படுத்த அரசாங்கம் தயங்காது. நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன், சொந்த நிலம் வைத்திருப்பவர்களுக்குப் புறம்போக்கு நிலம் பட்டா செய்து கொடுத்திருந்தாலும், அதைத்

1972 மார்ச் 9]

திரும்பப் பெறக்கூடிய அதிகாரம் அரசாங்கத்திற்கு இருக்கிறது என்று. அந்த அதிகாரத்தின்படி நிலச் சொந்தக்காரர் யாருக்குப் பட்டா செய்து கொடுத்திருந்தாலும் அது திரும்பப் பெறப்படும்

கோமுகி நீர்த் தேக்கப் பகுதியில் தொழிற்பேட்டை

* 388 **வினா—திரு. ந. நாச்சியப்பன் :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்கராபுரம் தொகுதியில் உள்ள கல்விராயன் மலைப் பகுதியில் கிடைக்கும் மூலப்பொருள்களைப் பயன்படுத்தி கோமுகி நீர்த்தேக்கப் பகுதியில் தொழிற்பேட்டை ஒன்று துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்போது துவக்கப்படும் ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) & (இ) இல்லை.

திரு. ந. நாச்சியப்பன் : கல்விராயன்மலைப் பகுதியில் மூங்கில் காடுகள் இருப்பதால் அங்கே ஒரு காகிதத் தொழிற்சாலையைக் கூட்டுறவுத் துறையில் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தக் காடுகள் எல்லாம் அரசாங்கத்தினுடைய கையகத்திற்கு வந்ததற்குப் பின்னாலே பரிசீலிக்கலாம்.

பல்லடத்துக்கு முன்சீப் கோர்ட்

* 389 **வினா—திரு. கே. என். குமாரசாமி :** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பல்லடத்தில் முன்சீப் கோர்ட் ஒன்று திறப்பதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. கே. என். குமாரசாமி : பல்லடம் தாலுக்கா ஹெட் குவார்டர்ஸ். அங்கே ஒரு முன்சீப் கோர்ட் ஏற்படுத்தினால் போக்குவரத்துக்கு சௌகரியமாக இருக்கும். ஆகவே வாரத்திற்கு 3 தினங்களாவது அங்கே ஒரு முன்சிப் கோர்ட்டை ஏற்படுத்த அரசாங்கம் யோசிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.